Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, MARCH 06, 2025

வியாழக்கிழமை 06, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 173 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

# கைதான 'டெய்சி ஆச்சி'க்கு பிணை



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவின் பாட்டி 'டெய்சி ஆச்சி' என்றும் அழைக்கப்படும் டெய்சி ஃபாரெஸ்ட், குற்றப் புலனாய்வுத் துறையால் (CID) கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். அவர் கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது தலா 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

# "இஸ்லாமிய தீவிரவாதம் தப்பான பதம்"



பேரினவாதிகள் எங்களை முடக்க முயற்சிக்கலாம். இஸ்லாமியத் தீவிரவாதம் என்ற பதம் இஸ்லாமியக் கொள்கைகளுக்கு முரண்பட்டது என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்கிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இடம் பெற்ற 2025 வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர், தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கில் அடிப்படைவாதம் என்ற கூற்றின் ஊடாக எம்மீது பழி சுமத்தப் பல தீயசக்திகள் முயற்சிக்கலாம். அமைச்சர்களின் கூற்றுக்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள இந்த சக்திகள் நிச்சயம் முயற்சிக்கும். இவ்வாறான கூற்றுக்களைக் கொண்டு பேரினவாதிகள் எங்களை முடக்க முயற்சிக்கலாம்.

எனவே, இந்தக் கூற்றின் உண்மைத் தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2



# "கடுமையான சட்டங்களை வகுக்கவும்"

இலங்கை சுங்கத்தில் காணப்படும் முறைகேடுகளை அகற்ற கடுமையான சட்டங்களை வகுக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ர். நாட்டின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கை சுங்கத்தின் உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் புதன்கிழமை (05) அன்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# மலையக தமிழர்களுக்கு ஏன் இந்த நிலை?


## ஜீவன் தொண்டமான் விளக்கம்

1948 முதல் 1977 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயத்தில் மலையக தமிழர்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை. இதுவே இன்றைய பிரச்சினைக்கு பிரதான காரணியாக உள்ளது.

ஆகவே, எல்லை நிர்ணயம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியுமான ஜீவன் தொண்டமான் வலியுறு த்தினார்.



தொடர்ச்சி P2




# மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு ஐ.எம்.எப். வலியுறுத்தல்

இலங்கை மின்சார சபை ஜனவரி மாதத்தில் நாட்டின் மின்சாரக் கட்டணத்தை திருத்தியுள்ளது. மேலும், இந்த திருத்தத்துடன் கூடிய மின்சார உற்பத்திச் செலவு புதிய கட்டணத்தால் ஈடுகட்டப்படாது என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளதாக, இலங்கைக்கான நிதியத்தின் மூத்த மிஷன் தலைவர் பீட்டர் பிரூவர், செவ்வாய்க்கிழமை(04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

எதிர்காலத்தைப் பார்க்கும்போது, புதிய கட்டணத்தின் கீழ் இலங்கை மின்சார சபையால் இழப்புகளைத் தடுக்க முடியாது என்பது தெளிவாகிறது என்று பிரூவர் கூறினார்.



இதன் விளைவாக, இலங்கை மின்சார சபையின் கடன்கள் மீண்டும் குவியும் அபாயம் இருப்பதாகவும், பின்னர் இலங்கை மின்சார சபை மீண்டும் அரசாங்கத்திற்கு சுமையாக மாறும் என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

# "வறுமையை சரியாக மதிப்பீடு செய்யவும்"

அரசாங்கம் முதலில் நாட்டின் வறுமைக் கோட்டை மிகச் சரியாகக் கணக்கிட வேண்டும். இவ்வாறு கணக்கிடாமை பிரச்சினையாக இருந்து வருகின்றது. இதன் மூலம் உண்மையான ஏழ்மையடைந்தோர் எண்ணிக்கையை தீர்மானித்துக் கொள்ள முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டு பட்ஜெட் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, சமூகப் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல், கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு சார் குழுநிலை விவாதம் இடம்பெறும் இந்த சந்தர்ப்பத்தில், சமூக வலுவூட்டல் தொடர்பான சரியான தரவுகள் மற்றும் குறிகாட்டிகளைப் புரிந்து கொள்ளாமல், தற்போதைய அரசாங்கம் வறுமையை ஒழிப்பதாகப் பேசுவதானது மிகவும் வேடிக்கையான விடயமாகும்.



ஜனாதிபதி கூட உலக வங்கி அறிக்கைகளையே பயன்படுத்துகிறார். ஆனால், வீட்டு அலகு ஒன்றின் வருமானம் மற்றும் செலவினம், உணவு மற்றும் உணவு அல்லாத செலவினங்கள் தொடர்பில் முதலில் கணக்கெடுப்பை நடத்த வேண்டும்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ஊடக பிரிவில்

# காணாமல் போன பொருட்கள் எங்கு சென்றன?

## ஓகஸ்டில் வழக்கு



ஜனாதிபதி செயலகத்தின் ஊடக பிரிவில் இருந்து பொருட்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பான வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நிலுப்புலி லங்காபுர புதன்கிழமை (05) இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் ஊடக பிரிவில் இருந்து ரூ.162 மில்லியன் மதிப்புள்ள பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தபால் மூல வாக்களிப்பு தொடர்பான அறிவித்தல்



எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்க எதிர்பார்க்கின்ற, அதற்கு தகைமை பெற்ற அரச அலுவலர்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவு அலுவலர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தபால் மூலம் வாக்களிக்க தகைமை பெற்றுள்ளவர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதி, 2025.03.03 ஆம் திகதியிலிருந்து 2025.03.12 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடிவடையுள்ளது.

தொடர்ச்சி P2

# "சட்டம், ஒழுங்கு வீழ்ச்சியடைகிறது"

தங்களின் காவலில் இருந்தவர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கு தவறியுள்ள அரச கட்டமைப்புகளான பொலிஸ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் பங்கு மற்றும் பொறுப்பு குறித்து இந்த கொலைகள் பல கேள்விகளை எழுப்பியுள்ளன. இந்த கொலைகள் இலங்கையில் சட்டம் ஒழுங்கு வீழ்ச்சியடைவதை வெளிப்படுத்தியுள்ளன என அனைவருக்குமான நீதி என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக எம்.ஏ.சுமந்திரன் பேராசிரியர் ஜயதேவ உயாங்கொட,

தொடர்ச்சி P2

# பேத்திக்கு எமனான ஆச்சியின் குளிசை

■ க.அகரன்



முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் உள்ள கற்குவாரி வீதியில் வசிக்கும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவரின் குழந்தை மாத்திரைகளை உட்கொண்டு உயிரிழந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (04) அன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த அன்டனி சஞ்சய் என்ற ஒன்றரை வயதுடைய குழந்தை பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டு இருந்த, தனது ஆச்சியின் குருதி அழுத்தத்திற்காகப் பயன்படுத்தும் மாத்திரைகள் உட்கொண்டுள்ளது.

இந்நிலையில், குழந்தை சோர்வடைந்து செல்வதை அவதானித்த தாய் , குழந்தையை மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்ததுடன்,

தொடர்ச்சி P2

# பாவனைக்கு உதவாத தேங்காய் எண்ணெய்

பாவனைக்கு உதவாத தேங்காய் எண்ணெய்யை நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ள நிறுவனங்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுக்கும் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(05) இடம்பெற்ற வாய்மூல விடை க்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சமிந்த விஜேஸ்ரீ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பாவனைக்கு உதவாத தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை கண்டுபிடித்துள்ளது. பொதுவாகவே பாவனைக்கு உதவாத பொருட்களை விற்பனை செய்வது தொடர்பில் நுகர்வோர் விவாகர சபை சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு வருகிறது.

இறக்குமதியாளர்கள் சிலர் தேங்காய் எண்ணெய் தொடர்பில் எந்தவித தெளிவும் இன்றி இத்தகைய பாவனைக்கு உதவாத தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்துள்ளனர். அத்துடன் உற்பத்தி செலவைக் குறைப்பதற்காக இவ்வாறு தரமற்ற தேங்காய் எண்ணெய்யை. தேசிய ரீதியான உற்பத்தியாளர்களும் உற்பத்தி செய்து சந்தைக்கு விநியோகித்துள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுக்கும் என்றார்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# “இஸ்லாமிய தீவிரவாதம் தப்பான பதம்”

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் குறிப்பிட்டுள்ள விடயம் தேசிய பத்திரிகைகளில் பிரதான செய்தியாக, புதன்கிழமை (05) வெளிவந்துள்ளன.

குறிப்பாக ‘ கல்முனை பகுதிகளில் மத அமைப்புக்களினால் பிள்ளைகள் தீவிரவாத கற்பித்தலுக்காகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்றும் அதன் காரணமாக உளவுத்துறையினர் கண்காணிப்புக்களை அதிகரிக்க வேண்டியுள்ளது’ என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த கூற்றினால் எமது பிரதேச மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது என்றார்..

கூற்றுக்களில் பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அமைப்புக்களின் பெயர்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கல்முனை ஜும்மா பள்ளிவாசல், பள்ளிவாசல் சம்மேளனம், ஜம் இய்யதுல் உலமா சபை உட்பட இஸ்லாமிய அமைப்புகள் உட்பட இஸ்லாமிய மக்கள் தீவிரவாதத்துக்கு எதிராகவும், தீவிரவாதம் தொடர்பான விசாரணைகளுக்கும், தொடர்புடைய அதிகாரிகளுடன் ஒன்றிணைந்து செயற்படத் தயாராகவுள்ளனர் என்றார்..

இவ்வாறான அடிப்படைவாத போக்குகள் உள்ள குழுக்களின் பின்னணியையும், அவர்களுக்கு யார் நிதி வழங்குகிறார்கள் என்பதையும் அறிந்து கொள்ள எமது மக்கள் ஆர்வமாக உள்ளனர் . எனவே புலனாய்வு விசாரணைகள் சட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்..

இதற்கு முன்னரும் முஸ்லிம் சமூகம் பல விடயங்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கை விடுத்தும் உரிய அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படவில்லை. இதனால் சஹ்ரானின் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன . இன்னொரு சஹ்ரானின் சம்பவம் இந்த நாட்டில் இனி ஒருபோதும் இடம் பெறக் கூடாது என்றார்.

கிழக்கில் அடிப்படைவாதம் என்ற கூற்றின் ஊடாக எம்மீது பழி சுமத்தப் பல தீய சக்திகள் முயற்சிக்கலாம். அமைச்சர்களின் கூற்றுக்களை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள இந்த சக்திகள் நிச்சயம் முயற்சிக்கும். அதிகாரபூர்மற்ற அறிவிப்புக்கள் வீண் அச்சம் மற்றும் சந்தேகங்களை ஏற்படுத்தும். இவ்வாறான நிலையை அரசாங்கம் ஏற்படுத்தக் கூடாது. இவ்வாறான பொதுவான கூற்றுக்களினால் சமூகத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதம் செயல்படுகிறது என்ற பழைய தவறான அபிப்பிராயம் மீண்டும் தோற்றுவிக்கப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே, கிழக்கில் அடிப்படைவாதம் என்ற அமைச்சர்களின் கூற்றுக்களை தெளிவுபடுத்தி அரசாங்கம் பொதுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன் என்றும் கேட்டுக்கொண்டார்.

## கைதான ‘டெய்சி ஆச்சி’க்கு பிணை

முன்னதாக, யோஷித ராஜபக்ஷ மற்றும் டெய்சி ஃபாரெஸ்டை கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்களாக பொலிஸார் பெயரிட்டு, பண மோசடி சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தனர்.



## “கடுமையான சட்டங்களை வகுக்கவும்”

இதன்போது, சுங்கத்தின் செயற்திறனின்மை, மோசடி, ஊழல் மற்றும் பொதுமக்களிடையே காணப்படும் அதிருப்தி குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதற்கு தீர்வாக, திணைக்கள செயல்பாடுகளை விரைவுபடுத்த புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேவைகளை சிறப்பாக வழங்குவதற்கான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

திணைக்களத்திற்கான புதிய மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து இதன்போது,கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கை சுங்கத்தில் காணப்படும் முறைகேடுகளை அகற்ற கடுமையான சட்டங்களை வகுக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மனிதவள முகாமைத்துவம், புதிய ஆட்சேர்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியை துரிதப்படுத்துவது குறித்தும் இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

கடந்த ஆண்டு சுங்கம் அடைந்த வருமான இலக்குகளை ஜனாதிபதி பாராட்டியதுடன், இந்த வருட வருமான இலக்கை அடைய சுங்கத் திணைக்களம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அப்போன்சு, இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் பி.பி.எஸ். சி. நோனிஸ் உட்பட இலங்கை சுங்கத்தின் உயர் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## காணாமல் போன பொருட்கள் எங்கு சென்றன?

காணாமல் போன பொருட்கள் எங்கு சென்றன, அவை பிற துறைகளுக்கு மாற்றப்பட்டனவா, அவற்றின் உண்மைத் தன்மை குறித்து விரிவான விசாரணை நடத்தப்படுவதாக பொலிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணை, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு ஜனாதிபதி செயலக அதிகாரிகள் குழுவொன்று அனுப்பிய



மொட்டைக்கடதாசி பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டதாக விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

## மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு ஐ.எம்.எப். வலியுறுத்தல்

இலங்கை மின்சார வாரியம் அரசாங்கத்திற்கு எவ்வளவு சுமையாக இருக்கும் என்பது அனைவருக்கும் அனுபவம் உள்ளதால், வரவிருக்கும் மின்சார கட்டண திருத்தத்தில் செலவு ஈடுகட்டும் மின்சார விலையை மீண்டும் நிர்ணயிப்பது அவசியம் என்று மிஷனின் மூத்த தலைவர் பீட்டர் பிரூவர் கூறினார்.

இழப்புகளை ஏற்படுத்தாத வகையில் விலைகளை நிர்ணயிப்பதற்கான தானியங்கி வழிமுறைகள் ஏற்கனவே உள்ளன என்றும், அவை செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.



இலங்கையின் மூன்றாவது மதிப்பாய்விற்கு நிர்வாகக் குழுவின் ஒப்புதலை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு வொஷிங்டனில் செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்றது, இதில் இலங்கையின் மூத்த தூதரகத் தலைவர் பீட்டர் ப்ரூவர், துணை செயல்பாட்டுத் தலைவர் கட்சியாரினா ஸ்விரிட்சென்கா மற்றும் வதிவிடப் பிரதிநிதி மார்த்தா டெஸ்ஃபே ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மலையக தமிழர்களுக்கு ஏன் இந்த நிலை?

### ஜீவன் தொண்டமான் விளக்கம்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டு பட்ஜெட் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், நாமல் ராஜபக்ஷ மற்றும் பைஸர் முஸ்தபா ஆகியோர் செவ்வாய்க்கிழமை (04) பாராளுமன்றத்தில் உரையாற்றி விசேட கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார்கள். மலையக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹட்டன் - செனன் தோட்டத்தில் கே.எம். பிரிவில் 100 பேர் வாழ்கிறார்கள். 26 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. இதனால் அப்பகுதியில் உள்ள அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதுவரையில் இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.

நான் நேரடியாகச் சென்று தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன். எம்மால் இயலுமான வகையில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பெருந்தோட்ட பகுதிகளில் சுமார் 3,500 வீடுகள் தீ மற்றும் இதர அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளன. தீ விபத்தினை அனர்த்தத்துக்குள் உள்ளடக்க முடியாது என்ற தவறான கொள்கை நீண்டகாலமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிக வீடுகளில் வசிக்கிறார்கள்.இவர்களுக்கு நிலையான தீர்வு கிடைக்கவில்லை என்றார்.



## பேத்திக்கு எமனான ஆச்சியின் குளிசை

அங்கிருந்து உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

எனினும், குழந்தை எவ்வித சிகிச்சையும் பலனின்றி உயிரிழந்துள்ளதுடன் பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



## “வறுமையை சரியாக மதிப்பீடு செய்யவும்”

இதனையே அரசாங்கம் ஆரம்பமாக செய்ய வேண்டும்.

ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்ட உரையில் வறுமை 25.9 சதவீதம் என்று கூறப்படுகிறது. 2024 முன்னேற்ற அறிக்கையின்படி, 2025 முதல் 2029 வரையிலான 5 ஆண்டுகளில் பல் பரிமாண வறுமையை எதிர்நோக்கும் 2 மில்லியன் குடும்பங்களை வலுவூட்டுவோம் என்று கூறப்பட்டுள்ளது. 2 மில்லியன் குடும்பங்களை வலுவூட்டுவது சிறந்த விடயம்.

இது நாட்டின் மொத்த வறுமைச் சுட்டியின் பிரகாரம் அமையவில்லை. உலக வங்கி அறிக்கையின்படி 2023இல் 56 இலட்சம் பேர் வறுமையில் வாடுகின்றனர். புள்ளி விபரங்கள் கூட துல்லியமாகத் தெரியாமல் வறுமையை ஒழிக்க முடியாது.

அத்துடன், ‘அஸ்வெசும’ ‘உதவித் தொகையை மட்டும் வழங்குவதன் மூலம் இந்த வறுமையை ஒழிக்க முடியாது. இதற்கு சேமிப்பு, முதலீடு, உற்பத்தி, ஏற்றுமதி, நுகர்வு என்பன நடக்க வேண்டும். தற்போது வழங்கப்பட்டு வரும் வறுமை ஒழிப்புக்கான திட்டங்களில் இங்கு பணம் வழங்கப்பட்டு நுகர்வு மட்டுமே நடக்கிறது.

இவ்வாறு வறுமையை ஒழிக்க முடியாது. வறுமையை

ஒழிப்பதற்கான புதிய வேலைத் திட்டம் இந்த அரசாங்கத்திடம்

இல்லை. ‘ஜனசவிய’ மற்றும் ‘சமுர்த்தி’ வேலைத் திட்டங்களில் இருந்து பாடம் கற்று, முறையான வறுமை ஒழிப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

## “சட்டம், ஒழுங்கு வீழ்ச்சியடைகிறது”

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலியபீரிஸ், சாணக்கியன் எம்.பி. முன்னாள் எம்.பி. எரான் விக்ரமரட்ண உட்பட பலர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி பாதுகாப்பு சட்டமொழுங்கினை பேணுவதற்காக உருவாக்கப்பட்ட முக்கிய நிறுவனங்கள் குறித்து கேள்வி எழுப்பியுள்ள சமீபத்தைய கொலைகள் குறித்து நாட்டின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸாரின் பாதுகாப்பில்இருந்தவேளை சந்தேக நபர் ஒருவர் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டமை உட்பட அதிர்ச்சியூட்டும் கொலைகள் பலவற்றைப் பெப்ரவரி மாதம் சந்தித்துள்ளது.

இதன் பின்னர் கொட்டாஞ்சேனையில் பொலிஸ் காவலிலிருந்த இரண்டு நபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்த தகவல் வெளியானது.

அதே வாரத்தில் வேறு சில சம்பவங்களும் இடம்பெற்றன மித்தேனியாவில் தந்தையும் இரண்டு பிள்ளைகளும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றது.

நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கும் தங்களின் காவலில் இருந்தவர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு தவறியுள்ள அரச கட்டமைப்புகளான பொலிஸ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் பங்கு மற்றும் பொறுப்பு குறித்து இந்த கொலைகள் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

இந்த கொலைகள் இலங்கையில் சட்டமொழுங்கு வீழ்ச்சியடைவதை வெளிப்படுத்தியுள்ளன. இலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்பட்ட சூழலில் இந்த நிலை அம்பலமாகி வருகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

> **“ நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கும் தங்களின் காவலில் இருந்தவர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு தவறியுள்ள அரச கட்டமைப்புகளான பொலிஸ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் பங்கு மற்றும் பொறுப்பு குறித்து இந்த கொலைகள் பல கேள்விகளை எழுப்பியுள்ளன**

## தபால் மூல வாக்களிப்பு தொடர்பான அறிவித்தல்


எவ்விதத்திலும் இத்திகதி நீடிக்கப்பட மாட்டாது.

அதேபோல், அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில்



(wwelections.gov.lk) சஞ்சரிப்பதன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# “சீனாவின் மூக்கு வேண்டாம்”



மீனவர் பிரச்சினையை வைத்துக்கொண்டு எமக்கும் இந்தியாவுக்கும் இடையே முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகவும் இதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என தெரிவித்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இந்த விடயத்தில் சீனா மூக்கை நுழைப்பதை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) நடைபெற்ற 2025 வரவு-செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கை மீனவர்களுடன் நாங்கள் பேசும் போது, இந்திய டோலர் படகுகளின் வருகை குறையுமாக இருந்தால் அதற்கான இந்தியா மற்றும் தமிழ் நாட்டுடன் பகைக்காமல் மாற்றுத் திட்டத்தை வழங்குவதாக கூறினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் பிரதமராக மன்மோகங் சிங் இருந்த போது ஆழ் கடல் மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தினால் பிரச்சினையைத் தீர்க்கும் என்று நாங்கள் அவரிடம் கூறினோம். இந்நிலையில் தமிழ்நாட்டு முதலமைச்சரை சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரைக் கேட்கின்றோம். டில்லி அரசாங்கத்துடனும் பேசுவோம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

## ஜெரோம் மீதான பயணத்தடை நீக்கம்

சர்ச்சைக்குரிய இலங்கை போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மீது விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை நீக்கப்பட்டுள்ளது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு புதன்கிழமை (05) கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



இரண்டு நாட்கள் வாக்குமூலம் அளித்த பிறகு, ஜெரோம் பெர்னாண்டோ டிசம்பர் 2023இல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (சிஐடி) கைது செய்யப்பட்டார்.

மே 2023 இல், சபைக்கு முன்னால் புத்தர், இஸ்லாம் மற்றும் இந்து மதம் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறப்படும் இந்த போதகர், இலங்கை பொலிஸாரால் தேடப்பட்டார்.

அவரது கருத்துகளின் காணொளி காட்சிகள் நாட்டில் உள்ள புத்த மதத்தைப் பின்பற்றுபவர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்த கொந்தளிப்பைத் தொடர்ந்து, ஜெரோம் பெர்னாண்டோ தனது சர்ச்சைக்குரிய அறிக்கைக்கு பல மன்னிப்புகளை வெளியிட்டார்.

சம்பவம் நடந்ததிலிருந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வெளிநாட்டில் இருந்த பிறகு அவர் இலங்கைக்கு வந்தபோது கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

## ‘மிதிகம ருவன்’னுக்கு விளக்கமறியல்

பாதாள உலக நபரும் போதைப்பொருள் கடத்தல் காரருமான ‘மிதிகம ருவன்’ என்று அழைக்கப்படும் ‘ஜயசேகர விதானகே ருவன் சாமர’ என்பவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுல் லங்காபுர புதன்கிழமை (05) அன்று உத்தரவிட்டுள்ளார்.

‘மிதிகம ருவன்’ என்பவர் ஸ்கைப் காணொளி அழைப்பு ஊடாக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



‘மிதிகம ருவன்’ என்பவர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டுக் கடந்த 2024ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டு கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வலையுடன் சபைக்கு வந்த எம்.பி.

ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், பாராளுமன்றத்துக்கு சுருக்கு வலையுடன் வருகைதந்து உரையாற்றினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) நடைபெற்ற 2025 வரவு-செலவுத் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைக் கொண்டுவந்து சபையில் காண்பித்து உரையாற்றினார்.



இந்த வலை சுருக்குவலையாகும் இது தடைசெய்யப்பட்ட வலையாகும். அந்த வகையான வலையைத் தடைசெய்ய வேண்டுமாயின் நாடு முழுவதும் தடைசெய்யவேண்டும். எனினும், வடக்கு கிழக்கை மட்டுமே குறிவைத்து இந்த வலைக்கு தடை செய்யப்பட்டுள்ளது என்றார்.


**விற்பனைக்கு**

கடைகள் மற்றும் துணிக்கடைகள் அமைப்பதற்கு உகந்த 25 பேர்ச் நிலம், வீடொன்றுடன், கொழும்பு -15 விஸ்டைக் வீதியில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கொள்ள:- 077 385 0798


## செவ்வந்தியின் தலைக்கு ரூ.1.2 மில்லியன் ரொக்கம்

பாதாள உலகக் குழுத் தலைவர் ‘கணேமுல்ல சஞ்சீவ’வின் கொலையுடன் தொடர்புடைய காணாமல் போன பெண் சந்தேக நபரைக் கைது செய்வதற்கு உதவியான தகவல்களுக்கு அறிவிக்கப்பட்ட வெகுமதியை இலங்கை பொலிஸ் அதிகரித்துள்ளது.

அதன்படி, பொலிஸ் தற்போது அந்தத் தொகையை முந்தைய ரூ.1 மில்லியனில் இருந்து ரூ.1.2 மில்லியனாக அதிகரித்துள்ளது.

நீர்கொழும்பு, கட்டுவெல்லகமவைச் சேர்ந்த 25 வயதான இஷாரா செவ்வந்தி என அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர், பிப்ரவரி மாதம் கொழும்பு நீதிமன்ற வளாகத்திற்குள் சஞ்சீவவைக் கொன்ற துப்பாக்கிதாரருக்கு உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார், எனவே அவரைக் கண்டுபிடிக்க பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.



இந்தக் கொலை தொடர்பாக செவ்வந்தியின் தம்பி மற்றும் தாயார் உட்பட மேலும் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தகவல் தெரிவிப்பவர்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படுவதை பொலிஸ் திணைக்களம் உறுதி செய்துள்ளது. மேலும், தகவல் தெரிந்தவர்கள் 071-8591727 அல்லது 071-8591735 என்ற அவசர அழைப்புகள் மூலம் அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவில் உள்ள எண் 05 நீதவான் நீதிமன்றத்தில் திட்டமிட்ட குற்றவாளியான சஞ்சீவ குமார சமரரத்ன அல்லது கணேமுல்ல சஞ்சீவ 19.02.2025 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.














## இப்தார் நிகழ்வு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்த இப்தார் மற்றும் அதனோடிணைந்த இராபோசன விருந்துபசாரம் கொழும்பு கோல் பேஸ் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (04) மாலை இடம்பெற்றது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவின் அழைப்பின் பேரில் இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றார்.







## “1,700 ரூபாயை பெற்றுக் கொடுப்போம்”

சம்பள நிர்ணய சபையுடனான கடந்தகால பேச்சுவார்த்தைகளைப் போலன்றி, தற்போது அது தொடர்பாக முறையான இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளத்தை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கும் எனவும் வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்ற அமர்வின்போது, வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, கடந்த முறையும் சம்பள நிர்ணய சபையே இந்த தீர்மானத்தை எடுத்தது. எனினும், அது நடைமுறைக்கு வரவில்லை. அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1,700 ரூபாய் அடிப்படை சம்பளமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இராதாகிருஷ்ணன் எம்.பி கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் வசந்த சமரசிங்க, அது உண்மை. அப்போது அந்த சம்பள அதிகரிப்பு தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை என்பதை நாம் அறிவோம். அதனால்தான் கடந்த செப்டம்பர் மாதம் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாட்டையும் எட்டியுள்ளோம்.

அந்தவகையில், 1,350 ரூபாய் அடிப்படை சம்பளம், ஏனைய 350 ரூபாய் அவர்கள் எடுக்கும் கொழுந்து கிலோவை அளவிட்டு வழங்கப்படும். அதன்படி, அவர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் கிட்டும்.

சில தோட்ட நிறுவனங்கள் இதற்கு இணங்காவிட்டாலும் பெரும்பான்மையான நிறுவனங்கள் இணங்கியுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 25 நாட்கள் தொழில் வழங்குமாறு நாம் தோட்ட நிறுவனங்களை கேட்டுக் கொண்டுள்ளோம்.

1,700 ரூபாய் அடிப்படை சம்பளமாக வழங்குவதனால் நாமும் அதனை வரவேற்கிறோம்.

அந்தவகையில், நூற்றுக்கு 80 வீதம் 1,350 ரூபாய் உடன் மேலும் 350 ரூபாய் பெற்றுக்கொள்ள முடியும் என தோட்டக் கம்பெனி நிறுவனங்கள் உறுதியாக தெரிவிக்கின்றன.

அந்த 350 ரூபாவை உறுதியாக பெற்றுக்கொ ள்வதற்கு அரசாங்கத்தின் மூலம் எதைச் செய்ய வேண்டுமோ அதை செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# நகைச்சுவை, நையாண்டி வேண்டாம்; தந்திரோபாயத்தை பயன்படுத்தவும்

பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வனவிலங்குகளின் கணக்கெடுப்பை நடத்த வேளாண் அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்குப் பயன்படுத்தப்படும் முன்மொழியப்பட்ட முறை, ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் செல்லும் விலங்குகளைக் கவனித்து தரவுகளைச் சேகரிப்பதாகும்.

உண்மையில், காட்டு விலங்குகளால் காடுகளுக்கு ஏற்படும் சேதங்களை நிவர்த்தி செய்வதற்குக் குறிப்பிட்ட தத்துவார்த்த மற்றும் நடைமுறை தலையீடுகள் தேவை என்பது நீண்ட காலமாக சுட்டிக் காட்டப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம், இலங்கையின் விவசாயத் தொழிலின் குறிப்பிடத்தக்க பகுதி காட்டு விலங்குகளால் தொடர்ந்து சேதமடைகிறது.

யானைகள், சிறுத்தைகள், குரங்குகள், மயில்கள், பன்றிகள் மற்றும் சிறுத்தைகள் போன்ற விலங்குகளால் நாட்டில் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் அறுவடையில் சுமார்
40 சதவீதமாகும். காட்டு யானைகளால் ஏற்படும் பயிர் சேதம் சுமார் 20 சதவீதமாகும்.

எனவே, எந்த ஒரு சூழ்நிலையிலும் பயிர்களைச் சேதப்படுத்தும் விலங்குகள் குறித்து ஒரு குறிப்பிட்ட கொள்கையை உருவாக்குவது அவசியம். இத்தகைய திட்டத்தை உருவாக்கும் போது, அந்த விலங்குகள் பற்றிய தரவுகளை வைத்திருப்பது அவசியம். மேலும் வனவிலங்கு கணக்கெடுப்பு அந்த திசையில் ஒரு படியாகும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை ஒவ்வொரு 10 வருடங்களுக்கும் மக்கள் தொகை மற்றும் வீட்டு கணக்கெடுப்பை நடத்தினாலும், விலங்குகள் குறித்த இத்தகைய குறிப்பிட்ட கணக்கெடுப்பு திட்டம் அரிதாகவே நடத்தப்படுகிறது.

இதற்குக் காரணம், இதற்கான குறிப்பிட்ட முறைகளை உருவாக்குவது கடினம். சீரற்ற மாதிரி முறையைப் பயன்படுத்தி விலங்குகளைப் பற்றிய புள்ளிவிவர தரவைப் பெறுவதே பயன்படுத்தப்படும் முறையாகும். இந்த முறை, வேளாண் அமைச்சகம் அத்தகைய முயற்சியை நோக்கி முதல் படிகளை எடுக்க முயற்சித்துள்ளது.

இதற்குக் காரணம், அவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரே இடத்தில் தங்குவதில்லை.

காட்டு யானைகளின் முந்தைய கணக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்ட முறைகளாக ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் நீர் துளை கோட்பாடு ஆகியவற்றை அடையாளம் காணலாம். அங்கு நடந்தது என்னவென்றால், யானைகள் தண்ணீரைக் கண்டுபிடிப்பது, நாளின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் இருக்கும் இடத்திற்கு வந்தவுடன் எண்ணப்பட்டன.

இந்த முறை, பயிர் சேதம் மற்றும் கால்நடை இழப்புகளைக் கணக்கிட அமைச்சு இதேபோன்ற தந்திரோபாயத்தை பயன்படுத்தியுள்ளது. அதாவது: ஒரு குறிப்பிட்ட திகதியில், ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரும் காட்டு விலங்குகளை எண்ணுதல். இங்கே, உணவு தேடிப் பயிரிடப்பட்ட நிலத்திற்கு வரும் காட்டு விலங்குகள் பற்றிய ஒரு தோராயமான யோசனையைப் பெறலாம்.

கொள்கைகளைத் திட்டமிடும்போது ஒரு அரசாங்கம் குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். யாரோ ஒருவர் அரசியல் உள்நோக்கம் அல்லது அறியாமை காரணமாக அதைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள்.

எனவே, பயிர் சேத விலங்கு கணக்கெடுப்பு திட்டத்தை குறைத்து மதிப்பிடுபவர்கள் உண்மையில் விவசாயிகள் பக்கம் இருந்தால், மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிவியலின் அடிப்படைக் கொள்கைகளை படிக்குமாறு நாங்கள் அவர்களை வலியுறுத்துகிறோம். அந்த சமூக-அரசியல் புரிதல் இல்லாமல், எல்லாவற்றையும் நகைச்சுவையாகவும், நையாண்டியாகவும் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க, ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா? மெல்ல மெல்ல பட்டைதீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகிவிட முடியாது.

ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக. மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது. அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### “பாடசாலைக்கான பயணங்கள் நிறுத்தம்”



பதுளை மாவட்டம், எல்ல கல்வி வலயத்திற்குட்பட்ட தொடம்கொல்ல, இலுக்பெலஸ்ஸ மற்றும் பஹல கலுகல ஆகிய கிராமங்களில் இருந்து பாடசாலை செல்வதற்கான ஒரே போக்குவரத்து சாதனமான லொறி சேவை நிறுத்தப்பட்டதால், சுமார் ஒரு வாரமாக அப் பகுதி மாணவர்களின் பாடசாலை பயணம் நிறுத்தப்பட்டுள்ளது.

வீதி வசதியின்மை காரணமாக இந்த மாணவர்களுக்கான பேருந்து சேவை பல மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளது, அதற்கு மாற்றாக, கிராம மக்களின் வேண்டுகோளின் பேரில் ஒரு லொறி உரிமையாளர், மாணவர்களை பலகொட்டுவ வரை ஏற்றிச் சென்றுள்ளார்.

இருப்பினும், வீதி முழுவதும் சேறும் சகதியுமாக இருப்பதாலும், வீதியில் பல இடங்கள் மோசமாக சேதமடைந்து பழுதடைந்துள்ளதாலும் லொறி சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, இலுக்பெலெஸ்ஸ ஆரம்ப பாடசாலை மற்றும் பல்லகெட்டுவ நகரத்தில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் சுமார் 70 மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

–பாலித ஆரியவன்ச

# ஓரணியில் இணைக்க முடியாது

முருகானந்தம் தவம்

எதிர்வரும் மே மாத முதல் வாரத்தில் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓரணியாகப் போட்டியிடுவதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டு, பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத 7 கட்சிகள் வரை இதுவரை கூட்டணி அமைத்துள்ள நிலையில், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சிகள் நாம் ஓரணியில் இணைய மாட்டோம் என்பதனை தேசிய மக்கள் சக்தி அரசின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் எதிரும் புதிருமாக வாக்களித்து உறுதிப்படுத்தியுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை கடந்த பெப்ரவரி மாதம். 17ஆம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்து வரவு-செலவுத் திட்ட உரையை ஆற்றிய நிலையில், வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 7 நாட்கள் இடம்பெற்று கடந்த 25ஆம் திகதி மாலை 6.10 மணியளவில் விவாதம் நிறைவடைந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 109 மேலதிக வாக்குகளினால் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

வரவு- செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஜீவன் தொண்டமான் எம்.பியாகவுள்ள ஐக்கியதேசியக்கட்சி, நாமல் ராஜபக்ஷ எம்.பியாகவுள்ள பொதுஜன பெரமுன,ரவி கருணாநாயக்க எம்.பியாகவுள்ள புதிய ஜனநாயக முன்னணி,திலித் ஜயவீர தலைமையிலான சர்வஜனசக்தி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் எதிர்த்து வாக்களித்தன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இந்த வரவு-செலவுத் திட்டத்தினை சிங்கள எதிர்க்கட்சிகள், அவற்றோடு பங்காளிகளான மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் எதிர்த்து வாக்களித்தபோது, அரசு தரப்பினருடன் இணைந்து யாரும் எதிர்பாராத வகையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான செல்வம் அடைக்கலநாதன் ஆதரவாக வாக்களித்து அதிர்ச்சியளித்தார். அதேநேரம், இலங்கை தமிழரசுக் கட்சியின் 8 எம்.பிக்களும் சுயேச்சைக் குழு 17 இந்த யாழ். மாவட்ட எம்.பியான அர்ச்சுனாவும் வாக்களிப்பில் பங்கேற்காது அவர்களும் அதிர்ச்சியளித்தனர்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் தமிழ், மலையக, முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடுகளை அவர்கள் முன்வைத்த உரைகளின் மூலம் பார்த்தால், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கு போலவே யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட, முஸ்லிம்கள் அதிகம் வாழும் கிழக்கு மாகாணத்தை முற்றாகப் புறக்கணித்து விட்டதாக முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் எம்.பிக்களும் கடுமையாக விமர்சித்ததுடன் வரவு செலவுத்திட்டத்தை தூக்கி எறிய வேண்டும் எனவும் கொந்தளித்தனர். மலையக தமிழ் அரசியல் கட்சிகளினது தலைவர்கள் எம்.பிக்களும் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக விமர்சித்தனர். தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு எதிர்பார்த்தளவுக்கு வழங்கப்படவில்லை, அந்த மக்களின் அடிப்படை வசதிகளில் அக்கறை காட்டப்படவில்லை என குற்றம் சாட்டியதுடன், அவர்கள் தமது விமர்சனத்திற்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் நியாயம் கற்பிக்கும் வகையில் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் தலைவராகக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து விமர்சித்தது. இனவாதத்தால் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சிறந்த ஆரம்பத்தை அரசாங்கம் முன்வைக்கும் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக எதனையும் இதில் பார்க்க முடியவில்லை. ஜனாதிபதி குறிப்பிட்டவாறு வடக்கு, கிழக்கில் மக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றே

> வரவு-செலவுத் திட்டத்தில் கூட தமிழ் மக்கள் நலன் சார்ந்து ஒரே முடிவை எடுக்க முடியாத இந்த தமிழ்த் தேசிய கட்சிகளும் தலைவர்களும் எம்.பிக்களும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் இவர்கள் எப்படி ஒரே கொள்கையில், ஒரே முடிவில் நிற்பார்கள்? ஆகவே, நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பதுபோல, தமிழ் தேசிய கட்சிகளை ஒருபோதும் ஓரணியில் இணைக்க முடியாது

எதிர்பார்த்தோம். இந்த மாகாணங்களுக்காக விசேடமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரையில் அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதைத் தவிர, வேறு எந்த தெரிவுகளும் எமக்கு கிடையாது என்று அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததுடன், வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்தும் வாக்களித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் பேசிய பலரும் வரவு-செலவுத் திட்டத்தை கடுமையாக விமர்சிக்கவோ எதிர்ப்போமென கூறவோ இல்லை. கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. நிலையான அரசியல் தீர்வு ஊடாக மாத்திரமே எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்றே கூறினார்கள். ஆனால், இறுதியில் வாக்கெடுப்பில் பங்கேற்காது தவிர்த்து விட்டனர்.

சுயேச்சைக் குழு 17இன் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியும் தன்னை ஒரு விடுதலைப் புலிகளின் தீவிர பற்றாளராகக் காட்டுபவரும் எந்தக்கொள்கையுமில்லாத தினமும் ஒரு அரசியல் செய்பவருமான இ.அர்ச்சுனாவும் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதி சமர்ப்பித்த பெப்ரவரி 17ஆம் திகதி மாலை இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திருத்த சட்டமூல விவாதத்தில் பங்கேற்று அந்த விடயத்துக்குப் புறம்பாக வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்துப் பேசிய அர்ச்சுனா எம்.பி. எதிர்க்கட்சிகள் பக்கத்தில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் ஒரேயொருவர் தான் மட்டுமே என்று கூறி, வரவு-செலவுத் திட்டத்தை புகழ்ந்தார். உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திருத்த சட்டமூலத்தை நிறைவேற்ற நடந்த வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களித்து விட்டு அரசின் வரவு-செலவுத் திட்டம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டதாகவும் அதில் தான் ஆதரவாக வாக்களித்ததாகவும் சமூக ஊடகங்களில் எந்தவித அறிவுமின்றிக் கூறினார்.

பின்னர் அவர் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் அனுரகுமார அரசையும் வரவு-செலவுத் திட்டத்தையும் மிகக்கடுமையாக எதிர்த்து விமர்சித்தார். அரசு தமிழ் மக்களுக்குப் பிச்சை போடுவதாகவும் வசைபாடினார், இந்நிலையில், வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது அவர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சி எம்.பிக்களும் அர்ச்சுனா எம்.பியும் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்காமையை எதிர்ப்பு என்றோ வாக்கெடுப்பு பகிஷ்கரிப்பு என்றோ நடுநிலை என்றோ கருத முடியாது. ஏனெனில், ஒன்று ஆதரவாக வாக்களிக்க வேண்டும் இல்லையெனில், எதிர்த்து வாக்களிக்க வேண்டும். அல்லது சபையில் அமர்ந்திருந்தவாறு எதிர்த்தோ, ஆதரவாகவோ வாக்களிக்காது நடு நிலை என அறிவித்திருக்க வேண்டும். அல்லது வாக்கெடுப்பை பகிஷ்கரிக்கின்றோம் என் அறிவித்து விட்டாவது சபைக்கு வராதிருந்திருக்க வேண்டும். ஆனால், எந்த அறிவிப்பும் இல்லாது இவர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்காதது சபைக்கு சமூகமளிக்காதோர் என்ற பட்டியலில் மட்டுமே சேரும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளில்,தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையில் ஏற்படும் குழப்பம், முரண்பாடுகள் போன்றே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை எதிர்ப்பதா? ஆதரிப்பதா? என்பதிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையில் குழப்பநிலை, முரண்பாடுகள் ஏற்பட்டன.

எனவே, ஒரு வரவு-செலவுத் திட்டத்தில் கூட தமிழ் மக்கள் நலன் சார்ந்து ஒரே முடிவை எடுக்க முடியாத இந்த தமிழ்த் தேசிய கட்சிகளும் தலைவர்களும் எம்.பிக்களும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் இவர்கள் எப்படி ஒரே கொள்கையில், ஒரே முடிவில் நிற்பார்கள்? ஆகவே, நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பதுபோல, தமிழ் தேசிய கட்சிகளை ஒருபோதும் ஓரணியில் இணைக்க முடியாது என்பது மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது.



## 110 ஆண்டுகள்

# ராணியாகவே வாழ்ந்த தெய்வானை

பாலித ஆரியவன்ச

இந்தியாவின் தமிழ்நாடு, புதுக்கோட்டைக் கிராமத்தில் பிறந்த தெய்வானை ராமசாமி, தனது 4 வயதில் தனது தந்தையுடன் இலங்கைக்கு வந்தார்.

அவர் தேயிலைத் தோட்டத்தில் கூலி வேலைக்குச் சென்றபோது, அவருக்கு 8 வயது. ஒரு தேயிலைச் செடியை விட உயரமில்லாத இந்தப் பெண், முதுகில் தொங்கும் ஒரு பிரம்புக் கூடையுடன் கொழுந்துகளைப் பறிக்கும்போது, கங்கனியால் பலமுறை பிரம்பால் அடிக்கப்பட்டிருக்கிறாள்.

வேறு எந்தக் குற்றத்தாலும் அல்ல. ஏனென்றால், தேவையான அளவு தேயிலை கொழுந்து பறிக்கப்படவில்லை என்பதற்காக. இந்தத் துன்பங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு வேலை செய்யக் கற்றுக்கொண்ட தெய்வானை, டீன் ஏஜ் பருவத்தை அடையும் போது, தோட்டத்தில் அதிக கொழுந்துகளைப் பறிக்கும் திறமையான இலை பறிப்பாளராக மாறி விட்டார்.

நான் என் மாமாவுடன் சாப்பிட ஆரம்பித்தபோது, எனக்கு 15 வயது. பின்னர், அந்தப் பெயர் முத்து தெய்வானை என மாற்றப்பட்டது. பெற்றோரின் அழுத்தம் காரணமாக, அந்த தம்பதியினரின் வாழ்க்கை இப்படித்தான் தொடங்கியது.

அன்று தெய்வானையின் கதையை நான் ஆவலுடன் கேட்டேன்.

“கடந்த காலத்தில், தோட்டங்கள் வெள்ளையர்களால் நிர்வகிக்கப்பட்டன. நாங்கள் சுண்ணாம்பு அறைகளில் இருந்தோம். அவர்கள் சுண்ணாம்பு அறைகளை உரம் மற்றும் களிமண்ணைப் பயன்படுத்தி மிகவும் சுத்தமாக வைத்திருந்தனர். வெள்ளைக்கார மனிதர் குதிரையில் வந்து எலுமிச்சை பழங்களின் சுத்தத்தைப் பரிசோதிக்கிறார். அது அழுக்காக இருந்தால், உங்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

ஆனால், இப்போது போலல்லாமல், அப்போது நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தோம். அரிசி ரேஷன் மற்றும் மாவு ரேஷன் தோட்டத்திலிருந்தே வழங்கப்படுகிறது. விறகுகளும் தோட்டத்திலிருந்துதான்.

நாங்கள் பெரும்பாலும் அரிசி, கொண்டைக்கடலை உள்ளிட்ட தானியங்களைச் சாப்பிட்டோம். நோய் குறைவாக உள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு நம் நாடு சிறிது காலம் நன்றாக செயல்பட்டாலும், இப்போது தோட்டங்கள் இடிந்து விழுந்து விட்டன.

நான் இப்போது ஸ்பிரிங் வெலி தோட்டத்தில் கொட்டகொட பிரிவில் இருக்கிறேன், அது ஒரு எலும்புக்கூடு போல, தோற்றமளிக்கும் ஒரு தொழிற்சாலை. தொழிற்சாலை மூடப்பட்டு இடிந்து விழும் நிலையில் உள்ளது.

இதுபோன்ற பல தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன என்று என் பேரக்குழந்தைகள் கூறும்போது என் இதயம் உடைகிறது.

ஊட்டச்சத்து இல்லை. குழந்தைகள் அடிக்கடி நோய்வாய்ப்படுகிறார்கள்.

பொருட்களின் விலைகள் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து, குழந்தைகள், குழந்தைகளின் குழந்தைகள், அவர்களின் குழந்தைகளின் குழந்தைகள் படும் துன்பங்களைப் பார்க்கும்போது, சில சமயங்களில் நானும் பாவம் செய்துவிட்டேன் என்று நினைக்கத் தோன்றுகிறது.

அன்று தெய்வானை சொன்னாள். கடைசியாக அவளைப் பற்றி செய்தி வெளியிட்டபோது, அவளுக்கு 108 வயது. வீட்டின் முன் இருந்த சிறிய முற்றத்தை அவர் பெருக்கி சுத்தம் செய்த விதம், கோழிக் கூட்டுக்குள் புகுந்து முட்டைகளை வெளியே எடுத்த விதம், கடந்த காலத்தை நினைத்துச் சிரித்த விதம் ஆகியவற்றை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

ஏழு குழந்தைகள், 45 பேரக் குழந்தைகள் மற்றும் 15 நான்காம் தலைமுறை குழந்தைகளைப் பார்க்கும் ஆசீர்வாதத்துடன் தாய் தெய்வானை 110 ஆண்டுகள் வாழ்ந்தார்.

ஸ்பிரிங் வேலி தேயிலைத் தோட்ட மக்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள் அவர்களின் நீண்ட பயணத்திற்குப் பிறகு சிறிது நேரத்திலேயே அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தனர்.

தேவியின் பேத்தி மலகமட ராசலிங்கம் மல்லிகா, அவரது வாழ்க்கையை பின்வருமாறு விவரித்தார்:

"பாட்டிக்கு ஒருபோதும் உடம்பு சரியில்லாமல் போனதில்லை, மிகவும் ஆரோக்கியமான பாட்டி. எங்கள் குழந்தைகளைக் கூட பாட்டி கவனித்துக் கொண்டார். நான் என் வீட்டுப்பாடத்தை நன்றாகச் செய்தேன்.

என் பாட்டியின் 103ஆவது பிறந்தநாளுக்கு நாங்கள் அழகாகத் தயாராகிக் கொண்டிருந்தபோது, இந்தியாவில் ஒரு மகன் (என் மாமாக்களில் ஒருவர்) இறந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அதனால் நாங்கள் அந்த பிறந்த நாளைக் கொண்டாடவில்லை. பாட்டி இறக்கும் வரை அந்த மரணம் பற்றி அவளுக்குத் தெரியாது. ஆனால், நாங்கள் பாட்டியின் 110ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினோம். அன்று இலங்கையில் தனது குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுடன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார், அழகான கேக் வாங்கப்பட்டது, பல உணவுகளை சமைத்தார்.

இந்தியாவில் உள்ள ஒரு மகளின் மகனால் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை, அதனால் அவர் சில நாட்களுக்குப் பிறகு வந்தார், அவர் அங்கு இருந்தபோது, அவரது பாட்டி இறந்துவிட்டார்.

இந்த மரணம் வயது முதிர்வு காரணமாக நிகழ்ந்தது என்று தீர்மானிக்கப்பட்டது.

அவளே அழுது கொண்டே, இந்தியாவிலிருந்து வந்திருந்த தன் பேரன் தன் பிறந்தநாளுக்குக் கொண்டு வந்திருந்த அழகான புடவையைத் தன் ஆச்சியின் உடலின் மேல் போர்த்தினாள் என மல்லிகா என்னிடம் சொன்னாள்.

பேரன் தியாடகராஜா, தனது பாட்டியைப் பற்றி மேலும் கூறினார்.

“பாட்டி தெய்வீகப் பாடல்களையும் நாட்டுப்புறப் பாடல்களையும் அழகாகப் பாடுவார், சில சமயங்களில் அருட வேலயில் பக்தியுடன் நடனமாடுவார்."

நீங்கள் குழந்தைகளை, குழந்தைகளின் குழந்தைகளை, அந்தக் குழந்தைகளின் குழந்தைகளைப் பார்த்தால், சுமார் 60 தலைமுறைகள் உள்ளன. ஆனால் அவர்களில் பெரும்பாலோர் இந்தியாவில் இருக்கிறார்கள், அவர்களில் சிலர் எங்களைப் பார்த்ததே இல்லை. "இந்த மரணம் எங்களுக்கு துக்கத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது,” என்று பேரன் கூறினார்.

இறுதி ஊர்வலத்தில் உடன் சென்ற நானும் ஒரு பெரிய அதிர்ச்சியை உணர்ந்தேன்.

உடல் மரியாதையுடன் ஒரு விலையுயர்ந்த சவப்பெட்டியில் வைக்கப்பட்டது.

கொடிகளை உடைக்காத தோட்ட மக்கள், தங்கள் இரங்கலைப் பகிர்ந்து கொள்ள வந்தனர்.

சுற்று வட்ட மக்களும், ஸ்பிரிங் வேலி மற்றும் கோடா கிராம மக்களும் மூன்று நாட்களாக உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்ததாக அறியப்பட்டது.

இந்து வழக்கப்படி, மதச் சடங்குகளைச் செய்த பிறகு, பூக்களால் அலங்கரிக்கப்பட்ட சவப்பெட்டியில் உடல் வைக்கப்பட்டது.

இந்த தேனா இந்தியாவில் உள்ள பிரமுகர்கள் மட்டுமே பயன்படுத்தும் தேனாவைப் போலவே தயாரிக்கப்பட்டது என்று அறியப்பட்டது.

இறுதி ஊர்வலம் லைம்பேலா வழியாகப் பிரதான சாலைக்குக் கொண்டு வரப்பட்டது.

முன்னால் ஒரு இசைக்குழு அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தது. தோட்டங்களில் இறுதிச் சடங்குகளில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் இறுதிச் சடங்கு இசைக்குப் பதிலாக, மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஒரு இசைக்குழு கொண்டுவரப்பட்டதாகச் சிலர் கூறினர்.

ஏன் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று கேட்டபோது, “நீங்கள் ஏன் மகிழ்ச்சியாக இல்லை? வேறு யாரும் இவ்வளவு காலம் வாழ்ந்ததில்லை" என்றார்கள்.

இறந்தவருடன் சென்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் கதறி அழுதனர். நாங்கள் மீண்டும் பாரம்பரிய பாடல்களைப் பாடி, கைதட்டி மகிழ்ச்சியடைகிறோம்.

ஏன் அப்படி? நான் கேட்டேன். தேயிலைத் தோட்டங்களில் வசிக்கும் இந்து மக்கள், அப்படி மகிழ்ச்சியாக இருக்கும்போது, இறந்தவருக்கு நல்ல ஆன்மா கிடைக்கும் என்று நம்புவதாக அவர்கள் கூறினர்.

மக்களின் ஆயுட்காலம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருவதால், அன்னை தெய்வத்திடமிருந்து நீண்ட ஆயுளைப் பெறுவது உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

தோட்டத்தின் ராணியாக இருந்த அவளுடைய பாசத்தை இழப்பது அனைவருக்கும் ஒரு துக்கமாகும்.

எனக்கு உயிர் கொடுத்த தேயிலை மரம், தேயிலை புதர்களுக்கு மத்தியில் நான் கல்லறையில் தனியாகப் படுத்திருந்த தேயிலை மரம், தேயிலை மரத்தை குடிக்கக் கொடுத்த கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் போது, ஒரு மழைத்துளி கண்ணீர்த் துளியாக விழுந்து தேயிலை மரத்தை முத்தமிட்டது.

# புரோக்கர்



இரா சிவலிங்கம்



மூன்று மணியிருக்கும், முருகன் வேலை முடிந்து, குளித்து சாப்பிட்டு விட்டு, படு உசாராக இருந்தான். என்ன? புரோக்கர் தூதனை இன்னும் காணவில்லை இரண்டு மணிக்கெல்லாம் வாரேன் என்று நேற்று சொன்னானே? என தனக்குள் பேசிக்கொண்டே கார் ரோட்டை வெறித்துப் பார்த்தவாறு அங்கும் இங்கும் நடந்தவாறு இருந்தான் முருகன்.

தூதன் கொழும்புக்கு வீட்டு வேலைக்கு ஒரு பையன் தேவையென கேட்டதும், சட்டென தன் மகன் குமரனை அனுப்புகிறேன். என எடுத்த எடுப்பிலேயே முருகன் ஏற்றுக் கொண்டான்.

புரோக்கர் தூதனும் நல்லா ஏத்தி விட்டு விட்டார். கொழும்புக்கு வேலைக்குப் போனா, நல்ல சம்பளம் கிடைக்கும். தான் அனுப்பிய பெண் பிள்ளைகள், பையன்கள், வயது போன பெண்கள், குமரிப் பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், யுவதிகள் எல்லாம் நல்லா இருப்பதாயும். இந்த தீபாவளிக்கு எப்படியெல்லாம் எல்லோரும் வருவார்கள் என்று நீயே பார்க்கலாம் என்று புழுகித் தள்ளினான்.

கொழும்புக்கு வேலைகளுக்குப் போன எல்லோரும் செல்போன், வீட்டுக்குத் தேவையான பொருள்கள், உடைகள், காசு, தங்கச் செயின், மோதிரம் எல்லாம் செய்து வைத்திருப்பதாகவும், இந்த முறை தீபாவளிக்கு நம்ம தோட்டத்தையே ஒரு கலக்கு கலக்கப் போறாங்க பாரு என்று தன்னால் இயன்றளவு என்ன என்ன சொல்ல முடியுமோ அவற்றையெல்லாம் சொல்லி ஒரு கால் போத்தலையும் வாங்கிக் கொடுத்து முருகனை எப்படியோ சம்மதிக்க வைத்து விட்டான் புரோக்கர் தூதன்.

புரோக்கர் தூதன் தோட்டத்தில் வேலை இல்லை. கொழும்புக்கு ஆள் சேர்த்து, வீட்டு வேலைகளுக்கு ஆள் அனுப்பும் வேலை. எப்படியாவது கிழமைக்கு நாலு, ஐந்து பேரை கொழும்புக்கு கூட்டிக்கொண்டு போய் குறிப்பிட்ட வீட்டில் விட்டவுடன் முதல் மாத சம்பளத்தை வீட்டுக்கு கொடுக்க வேண்டும் என வாங்கிக் கொள்வார். அவர்கள் கொடுக்கும் கொமிசன் காசையும் வாங்கிக் கொள்வார்.

நல்ல வருமானம் எந்த நேரமும் குடித்து விட்டுத்தான் இருப்பார். கட்டையான கருத்த மெலிந்த உருவம். கண்கள் எந்த நேரமும் சிவப்பாக இருக்கும். எப்படியெல்லாம் ஒருவனை ஏமாற்றிப் பிழைக்கலாம் என்ற மாதிரியான முகம். வாயைத் திறந்தால் பொய்தான் வரும். நல்லா கதைப்பார். கதைத்துக்கொண்டே கால் போத்தலையும் வாங்கிக்கொடுத்து எப்படியான விடயத்தையும் சாதிப்பார். அவருக்கு தெரியாத சூதுவாது, திருக்கிஸ், பொய், பித்தலாட்டம், ஏமாற்றுவித்தை, நம்பிக்கைத் துரோகம், இவையாவும் ஒருங்கிணைந்த ஒரு மனிதன் தான் தூதன். மனசாட்சி என்றால் என்னவென்று கேட்கும் அளவுக்கு நடந்து கொள்வார்.

காலையிலேயே கோட்டைப் போட்டுக் கொண்டு பெரிய கலர் குடையையும் எடுத்தக் கொண்டு தோட்டம் தோட்டமாக ஆள் சேர்க்க சென்று விடுவார். இவரை நம்பியும் பல பேர் பல இடங்களில் இருந்து வருவார்கள். (கொழும்பு துரைமார்கள், முதலாளிமார்கள்) பெரிய பெரிய இடங்களிலெல்லாம் நல்ல தொடர்பு வைத்திருக்கின்றார். இதனால் அடிக்கடி கொழும்பிலிருந்து பல எஜமான்கள் இவரைத் தேடிக்கொண்டு தோட்டத்திற்கு வருவதுண்டு. இவரை தொடர்பு கொண்டால் நிச்சியம் தமக்குத் தேவையான வேளையாட்கள் கிடைக்கும் என நம்பி பிற இடங்களில் இருந்து வருவார்கள்.

இப்படி ஒரு சம்பவம் தான் இன்று அந்த தோட்டத்தில் அரங்கேற போகின்றது. இவருக்கு இன்று கிடைத்தப் பையன் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் குமரன் ஆகும். இவனைத்தான் இன்று கொழும்புக்கு பங்களா வேலைக்கு அனுப்புவதாக பரோக்கர் தூதனிடம் முருகன் வாக்கு கொடுத்து விட்டு ரோட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். புரோக்கரையும் காணவில்லை மாத்தியாவையும் காணவில்லை என முனுமுனுத்துக் கொண்டிருந்தான்.

சற்று துரத்தில் கார் ஒன்று தோட்டத்துப் பக்கமாக வருவதைக் கண்ட முருகனுக்கு ஒரே சந்தோசம். இன்றைக்கு எப்படியாவது மாத்தியாவிடம் இரண்டாயிரம், அல்லது மூவாயிரம் வாங்கி விட வேண்டும். கையிலும் காசு இல்லை, இந்த மாதம் சம்பளமும் இல்லை. என யோசித்துக் கொண்டே மெதுவாக ரோட்டுப்பக்கமாக வந்தான்.

முருகனைக் கண்ட புரோக்கர் காரில் இருந்து இறங்கி முருகனை மாத்தியாவுக்கு அறிமுகப்படுத்தினான். புரோக்கர் மது அருந்தி இருந்தான் என்பதை அவன் பேசும் போது உணர்ந்து கொண்டான். முருகனுக்கு வாய் ஊறியது. மாத்தியாவிடம் தன் மகனைப் பத்திப் புகழ்ந்து பேசினான். நல்லா வேலை செய்வான், நல்ல பையன், பொய், களவு கிடையாதுங்க, ஏம் பேச்ச மீறமாட்டான். என செல்லிக் கொண்டே பேனான். இதையெல்லாம் புரோக்கர் மாத்தியாவிடம் சிங்களத்தில் எடுத்துச் சொன்னான்.

மாத்தியாவுக்கு பையனைப் பார்க்காமலே அவன் மேல் விருப்பம் வந்து விட்டது. காரில் இருந்த விஸ்கியை கொஞ்சம் முருகனுக்கு கொடுத்தார். அதை வாங்கி ஒரே மொடக்கில் குடித்து விட்டு வாயைத் துடைத்துக் கொண்டான். வாங்க மாத்தியா வீட்டுக்குப் போவோம். அங்கேதான் பையன் இருப்பான். காரில் ஏறி வீட்டுக்கு கிட்ட இருக்கும் மதுர வீரன் கோயிலுக்குப் பக்கத்தில் நிறுத்தி விட்டு குமரனை தேடுகின்றார்கள்.

குமரன் மிக சந்தோசமாக தோட்டத்து கிரவுண்டில் கிரிக்கட் விளையாடிக்கொண்டிருந்தான். அவன்தான் நட்சத்திர துடுப்பாட்ட வீரன். குமரன் என்றால் தோட்த்தில் தெரியாதவர்கள் கிடையாது. அவன் நல்ல பையன் என்று எல்லோருக்கும் தெரியும்.

மாத்தியா அந்தா அங்க பந்தடிக்கிறான். நல்லா கிரிக்கட் வெளையாடுறான் பாருங்க. எப்படி அடிக்கிறான் ஏம் புள்ள பார்த்தீங்களா? அவெந்தான் தோட்டத்துல டெண்டுல்கார்.

இங்க பாக்கிறது முருகன் இதவுட நல்ல போல எல்லாம் நம்ம வூட்ல இருக்றது. நம்ம பையன் ஸ்கூல் டீம்ல லெதர் போல் வெளயாடுறது. அங்க வந்தா நல்லா வெளயாடலாம்

மே புரோக்கர் மட்ட பரக்குவெனவா? இக்மனட்ட ஏ லமயாவ கத்தாகரண்ட. மருகனுக்கு இப்பொழுதுதான் விஸ்கி வேலை செய்யத் தொடங்கியது. ஏய் குமார் இங்கே வா. யாரு வந்திருக்கா பாரு, சுருக்கா வாடா, குமரனை கூப்பிடுகின்றான். குமரன் காதில் இது ஒன்றும் விழ வில்லை. அவன் வரும் அறிகுறியே இல்லை.

புரோக்கர் அவசரப்படுத்தினான். ஒரு இரண்டாயிரம் காசையும் கையில் திணிக்கின்றான். ஏய் குமார், ஏய் குமார் நீ வர்றியா இல்லையா? முருகன் வாய் உளருகின்றான். அவன் சிக்சராக அடிக்கின்றான். அவனுடைய நண்பர்கள் எல்லாம் குமாரை உட்சாகப்படுத்துகின்றார்கள்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு நேராக முருகன் மைதானத்துக்கள் நுழைந்து விட்டான். குமரனைக் கையப்பிடித்து இழுத்து, ஏய் நீ அந்த மாத்தியாவோட கொழும்புக்குப் போ. உன்னை வேலைக்கு கூட்டிக்கொண்டு போகத்தான் அந்த மாத்தியா வந்திருக்கிறார். சுருக்கா வாடா அவருக்கு நேரமாகுது.

முருகன் தள்ளாடுகின்றான். இப்படியெல்லாம் மகனோடு தகறாறு பண்ணிக்கொண்டிருந்த தகப்பனையும், புரோக்கர் தூதனையும் கொழும்பில் இருந்த வந்த மாத்தியாவையும் அங்கு விளையாடிக்கொண்டிருந்த அனைத்து சிறுவர்களும் ஒன்றாகச் சேர்ந்து இந்த பக்கம் வராதே, நாங்க படிக்கனும், நாங்க ஒன்னும் வேல செய்ய பொறக்கல, ஒங்க புள்ளய நீங்க எங்கயாவது வீட்டு வேலைக்கு அனுப்புவியா, இனி சாராயம் கொடுத்து ஆள் புடிக்கிறது, கொழும்புக்கு வேலைக்கு கூட்டிக்கொண்டு போற வேலையெல்லாம் மரியாதையா விட்டுடுங்க. இப்படித்தான் போன மாசம் கொழும்புக்கு போன பையன் பொனமாக திரும்பி வந்தான். என சிறுவர்கள் ஆவேசமாக ஒவ்வொருவரும் கூச்சல் போட்டார்கள்.

கொஞ்ச நேரத்தில் தோட்டத்து மக்கலெல்லாம் மைதானத்தில் கூடி விட்டார்கள். சேதியை அறிந்த புரோக்கர் தூதனுக்கு நல்ல பூசை கொடுத்தார்கள். முருகனுக்கு புத்தி மதி கூறயதுடன் மாத்தியாவையும் இனி வேலைக்கு ஆள் தேடிகிட்டு தோட்டத்துப் பக்கம் வர கூடாது புரியுதா? இளைஞர்கள் உசாரானார்கள். இனிமேல் யாரும் வந்தால் மானம் மரியாதையெல்லாம் போயிடும். இன்னைக்கு நீங்க தப்பிச்சிக்கிட்டிங்க என இளைஞர்கள் எச்சரித்தார்கள். சில நொடிகளில் தோட்டத்தில் இருந்து மாத்தியாவின் கார் வேகமாக போவதை மக்கள் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.



அமெரிக்கா

இந்தியா– சீனாவுக்கு

# பரஸ்பர வரி விதிக்கும் அமெரிக்கா

ஏப்ரல் 2ஆம் திகதி முதல் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் பொருட்கள் மீது அமெரிக்கா பரஸ்பர வரிகளை விதிக்கும் என்று, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்கப் பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சிகளின் கடும் அமளிகளுக்கிடையே கூட்டுக்குழுக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி ட்ரம்ப் இவ்வாறு கூறியுள்ளார்.



அவர் தொடர்ந்து பேசியதாவது, "மற்ற நாடுகள் பல ஆண்டுகளாக நமது நாட்டுக்கு எதிராக அதிக வரிகளை விதித்து வருகின்றன. இப்போது அந்த நாடுகளுக்கு எதிராக அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.ஐரோப்பிய யூனியன், சீனா, பிரேசில், இந்தியா, மெக்சிகோ மற்றும் கனடா உள்ளிட்ட பிற நாடுகள் நாம் வசூலிப்பதைவிட மிக அதிக அளவில் வரிகளை வசூலிக்கின்றன. இது மிகவும் நியாயமற்றது.

"இந்தியா நம்மிடம் 100 சத வீதத்திக்கும் அதிகமான வரிகளை வசூலிக்கிறது. தென் கொரியாவிற்கு நாம் இராணுவ ரீதியாகவும், வேறு பல வழிகளிலும் ஏராளமான உதவிகளை வழங்குகிறோம். ஆனால் அவர்கள் அதிகமான வரிகளை விதிக்கிறார்கள். நாம் தயாரித்த பொருட்களுக்குச் சீனா 2 மடங்கு வரியை வசூலிக்கிறது. தென்கொரியா 4 மடங்கு வசூலிக்கிறது.

"ஏப்ரல் 2ஆம் திகதி முதல் இந்தியா,சீனா உள்ளிட்ட நாடுகளின் பொருட்கள் மீது அமெரிக்காவின் பரஸ்பர வரிகள் உடனடியாக அமுலுக்கு வரும். அவர்கள் நம் மீது என்ன வரி விதித்தாலும், மற்ற நாடுகளுக்கு நாம் வரி விதிப்போம். உலகத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டினாலும் நாம் பல தசாப்தங்களாக ஏமாற்றப்பட்டு வருகிறோம், இனி அது நடக்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

"இந்த நடவடிக்கை சில பொருளாதார சீர்குலைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றாலும், அமெரிக்கத் தொழில்களைப் பாதுகாக்க இது ஒரு அவசியமான நடவடிக்கை ஆகும். அதிகப்படியான வரிவிதிப்புகளால் சிறிது இடையூறுகள் இருக்கும். ஆனால் நாங்கள் அதைப் பற்றி கவலைப்படவில்லை. அது பெரிய விடயமாக இருக்காது. அதிகப்படியான வரிகள் டிரில்லியன் டொலர்களை உருவாக்கும்" என்றார்.



ஜப்பான்

## ஜப்பானில் காட்டுத்தீ:
### பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் வெளியேற்றம்

ஜப்பான் - ஒபுனாடோவில், கடந்த வாரம் தொடங்கிய காட்டுத்தீ, அருகில் உள்ள நகரங்களுக்கும் பரவத் தொடங்கியதால், 100 வீடுகள் தீக்கிரையாகி உள்ளன. இதில் பல இலட்சம் பொருட்கள் எரிந்து நாசமானதாகக் கூறப்படுகிறது.

அதேபோல், 6.500 ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகின. இதனால் அந்த பகுதி முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சியளிக்கிறது.

எனவே, அங்கு வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

அதன்படி, 1,200 பேர் அங்கிருந்து வெளியேறினர். இந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதனையடுத்து, தீயை அணைக்க ஹெலிகாப்டர்கள் மூலம் தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பீய்ச்சிடித்து வருகின்றனர். இதன்படி 2,000க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த காட்டுத்தீ சம்பவம், அரை நூற்றாண்டில் அந்நாட்டின் மிகப்பெரிய தீ விபத்தாகக் கருதப்படுகிறது.

அமெரிக்கா

அமெரிக்க பொருட்களுக்கு

## வரி விதித்த கனடா



அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரி விதிப்பதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரியை விதிக்கும் உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரி விதிப்பதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

அமெரிக்கப் பொருட்களுக்கு பதிலடி வரி விதிக்கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டுப் பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குக் கடுமையான வரி விதிக்கும் அமெரிக்காவை எதிர்த்துப் போட்டியிடப்போவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடா மீதான வரி விதிப்பு நடவடிக்கையை "வர்த்தக போர்" என்று குறிப்பிட்டுள்ள ட்ரூடோ, இதன் மூலம் அமெரிக்கக் குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், "அமெரிக்காவுடனான வர்த்தக போரில் இருந்து பின் வாங்கப் போவதில்லை. கனேடியர்கள் நியாயம் மற்றும் கண்ணிய மிக்கவர்கள். சொந்த நாட்டின் நல்லிணக்கம் ஆபத்தில் இருக்கும் போது சண்டையில் இருந்து பின்வாங்க மாட்டோம்" என்று கூறியுள்ளார்.



108ஆவது பொன் அணிகள் போர்

# இன்று ஆரம்பம்

சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 108ஆவது பொன் அணிகள் போர் என்று அழைக்கப்படும் மாபெரும் கிரிக்கெட் போட்டித் தொடர் வியாழக்கிழமை (06) ஆரம்பித்து வெள்ளிக்கிழமை (07) மற்றும் சனிக்கிழமை (08) என மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி 175ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வாண்டு பொன் அணிகளின் போரின் வரலாற்றில் முதன் முறையாக மூன்று தின போட்டியாக நடைபெற உள்ளது.

இதுவரை காலமும் நடைபெற்ற போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 35 தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி 16 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 31 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஒரு போட்டி கைவிடப்பட்டது.

இத் தொடரின் தொடர்ச்சியாக 32ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றி கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களை கொண்ட கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

பிரான்சிஸ் ஜோசப் வெற்றிக் கிண்ணத்துக்கான 5ஆவது இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி மார்ச் 12ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களை கொண்ட ஒரு நாள் போட்டியில், 23 தடவைகள் சென் பற்றிக்ஸ் கல்லூரியும் 7 தடவைகள் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டி இடைநிறுத்தப்பட்டது.

இருபதுக்கு -20 கிரிக்கெட் போட்டித் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மூன்று தடவைகளும் யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு தடவையும் வெற்றி பெற்றுள்ளன.

இவ்வருடம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு பற்குணம் மதுஷனும் யாழ்ப்பாண கல்லூரி அணிக்கு சிதம்பரலிங்கம் மதுஷனும் தலைமை தாங்குகின்றனர்.



சம்பியன்ஸ் கிண்ணம்:
அவுஸ்திரேலியாவை வென்று

## இறுதிப் போட்டியில் இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான முதலாவது அரையிறுதிப் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 264/10 (49.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஸ்டீவன் ஸ்மித் 73 (96), அலெக்ஸ் காரி 61 (57), ட்ரெவிஸ் ஹெட் 39 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஷமி 3/48, இரவீந்திர ஜடேஜா 2/40, வருண் சக்கரவர்த்தி 2/49, அக்ஸர் பட்டேல் 1/43, ஹர்திக் பாண்டியா 1/40)

இந்தியா: 267/6 (48.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 84 (98), ஷ்ரேயாஸ் ஐயர் 45 (62), லோகேஷ் ராகுல் ஆ.இ 42 (34), ஹர்திக் பாண்டியா 28 (24), றோஹித் ஷர்மா 28 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: நாதன் எலிஸ் 2/49, அடம் ஸாம்பா 2/60, கூப்பர் கொனோலி 1/37, பென் டுவார்ஷூஸ் 1/39)

போட்டியின் நாயகன்: விராட் கோலி



நியூசிலாந்துக்கெதிரான
இருபதுக்கு–20 தொடர்:

## பாகிஸ்தான் குழாமில் பாபர், றிஸ்வான் இல்லை

### ஒருநாள் குழாமில் ஷகீன் அல்லை

நியூசிலாந்துக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில் முன்னாள் அணித்தலைவர் மொஹமட் றிஸ்வான் மற்றும் பாபர் அஸாம் ஆகியோர் இடம்பெறவில்லை. நசீம் ஷாவும் இக்குழாமில் இடம்பெறவில்லை.

குறித்த குழாமில் ஷடாப் கான் இடம்பெற்றுள்ளதோடு, உப அணித்தலைவராகவும் பெயரிடப்பட்டுள்ளார். அணித்தலைவராக சல்மான் அக்ஹா பெயரிடப்பட்டுள்ளார். மொஹமட் ஹரிஸும் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான குழாமில் ஷகீன் ஷா அஃப்ரிடி, ஹரிஸ் றாஃப் இடம்பெறவில்லை.

இ-20 குழாம்: ஹஸன் நவாஸ், ஓமைர் யூசுஃப், மொஹமட் ஹரிஸ், அப்துல் சமட், சல்மான் அக்ஹா (அணித்தலைவர்), இர்ஃபான் நியாஸி, குஷ்டில் ஷா, ஷடாப் கான், அப்பாஸ் அஃப்ரிடி, ஜஹன்டட் கான், மொஹமட் அலி, ஷகீன் ஷா அஃப்ரிடி, ஹரிஸ் றாஃப், சுஃபியான் முக்கீம், அப்ரார் அஹ்மட், உஸ்மான் கான்.

ஒருநாள் குழாம்: மொஹமட் றிஸ்வான் (அணித்தலைவர்), சல்மான் அக்ஹா, அப்துல்லாஹ் ஷஃபிக், அப்ரார் அஹ்மட், அகிஃப் ஜாவீட், பாபர் அஸாம், பாஹீம் அஷ்ரஃப், இமாம்-உல்-ஹக், குஷ்டில் ஷா, மொஹமட் அலி, மொஹமட் வாஸிம் ஜூனியர், இர்ஃபான் நியாஸி, நசீம் ஷா, சுஃபியான் முக்கீம், தயாப் தஹிர்.



அயோத்தி

அயோத்தி இராமர் கோயிலை

## குண்டு வீசி தகர்க்க முயற்சி

அயோத்தி இராமர் கோயிலைக் குண்டு வீசி தகர்க்க எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ அமைப்பே, இந்த சதி செயலை செய்யத் திட்டமிட்டிருந்ததாக, இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, சந்தேகத்தின் பேரில், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 2 கையெறி குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அயோத்தி இராமர் கோயில் கட்டப்பட்டு பிரபலம் அடைந்துள்ளதால், இங்கு தாக்குதல் நடத்தப் பாகிஸ்தான் ஐஎஸ்ஐ சதி செய்கிறது.

அயோத்தி ராமர் கோயிலில் தாக்குதல் நடத்துவதற்காக, அயோத்தி மாவட்டத்தின் பைசாபாத் நகரின் மில்கிபூர் பகுதியைச் சேர்ந்த அப்துல் ரகுமான் அபுபக்கர் (19) என்ற இளைஞரைப் பாகிஸ்தான் ஐஎஸ்ஐ அமைப்பினர் தேர்வு செய்துள்ளனர்.



இவர் ஹரியானாவின் பரிதாபாத்தில் சங்கர் என்ற பெயரில், உணவு விடுதி ஒன்றில் பணியாற்றுகிறார். பகுதி நேரத் தொழிலாக முச்சக்கர வண்டி ஓட்டி வருகிறார்.

அயோத்தி ராமர் கோயில், உத்தரப் பிரதேசத்தில் உள்ள அரசு அலுவலகங்கள் ஆகியவற்றை உளவு பார்க்கும் பணி அப்துல் ரகுமானுக்கு வழங்கப்பட்டது. இவருக்குத் தீவிரவாத அமைப்பின் வலையமைப்பின் ஒன்றின் மூலம் இரண்டு கையெறி குண்டுகளைப் பாகிஸ்தான் ஐஎஸ்ஐ அமைப்பினர் வழங்கியுள்ளனர்.

இது குறித்த தகவல் குஜராத் பொலிஸாரின் தீவிரவாத தடுப்பு பிரிவுக்கு கிடைத்துள்ளது. அவர்கள் ஹரியானா சிறப்புப் படை பொலிஸாருடன் இணைந்து அப்துல் ரகுமானை பரிதாபாத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

அவர் தங்கியிருந்த வீட்டில் ஒரு 'பென் டிரைவ்' மீட்கப்பட்டுள்ளது. அதில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ள இடங்களின் வரைபடம், தாக்குதல் நடத்துபவர்களுக்கான அறிவுறுத்தல்கள் ஆகியவை இருந்துள்ளன.

இத்தகவல்களை ஆராய்ந்த போது விரைவில் அயோத்தி இராமர் கோயில் மீது குண்டு வீச்சு தாக்குதல் நடத்தச் சதித் திட்டம் தீட்டியது தெரியவந்தது. அங்கு இரண்டு கையெறி குண்டுகளும் மீட்கப்பட்டு செயல் இழக்கச் செய்யப்பட்டுள்ளது.

மேலும், அயோத்தி கோயிலைத் தகர்க்கச் சதி நடந்ததாகத் தகவல் வெளியாகி உள்ள நிலையில், ஐஎஸ்ஐ உளவு அமைப்புடன் தொடர்பிலிருந்த ராஜஸ்தானைச் சேர்ந்த ரயில்வே ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்ட அதிர்ச்சி செய்தியும் வெளியாகியுள்ளது.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில்

## முதலாமிடத்துக்கு முன்னேறிய ஓமர்ஸாய்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் முதலாமிடத்துக்கு ஆப்கானிஸ்தானின் அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவுக்கெதிரான சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் 108 ஓட்டங்களைப் பெற்றதுடன், 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நிலையிலேயே மூன்றாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை ஓமர்ஸாய் அடைந்துள்ளார்.

இதேவேளை இந்தியாவுக்கெதிரான சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் 28 ஓட்டங்களைப் பெற்றதுடன், ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய நியூசிலாந்தின் மிற்செல் சான்ட்னெர், ஆறாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய்,
2.மொஹமட் நபி,
3.சிகண்டர் ராசா,
4.மெஹிடி ஹஸன் மிராஸ்,
5.மிற்செல் சான்ட்னெர்.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்கெதிரான சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் 64 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்காவின் ஹெய்ன்றிச் கிளாசென், துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 06, மார்ச் 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.